ஆலைக்கு விலைக்குக் கொடுப்பது, கடன் கிடைப்பது போன்ற பிரச்சினைகள் பற்றி பேசுவதற்கு அங்கு வாய்ப்பு இல்லாமலிருக்கிறது. ஆகவே, இதை கருத்தில் கொண்டு அமைச்சர் அவர்கள் உடனடியாக நமக்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள மூன்று இயக்குநர்களை அந்த ஆலையில் நியமிக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : அரசு முயற்சி எடுக்கும்.

(முற்பகல் 9–30)

திரு. மா. சின்னராசு : தலைவர் அவர்களே, ரோடு செஸ் மூலம் செலவிடப்பட்ட தொகை பற்றி குறிப்பிட்டார்கள். கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில், கோவை தாலுக்காவில் இந்த ரோடு செஸ் மூலம் எந்தச் சாலையும் பராமரிக்கப்படவில்லை. அந்தப் பணம் செலவிடப்படவில்லை. ஆகவே கரும்பு கொடுக்கப்படுகிற அந்தப் பகுதிகளில் இந்த ரோடு செஸ்ஸிலிருந்து சாலைகளை அபிவிருத்தி செய்ய அரசு நிதி ஒதுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இந்தச் சாலைகள் பராமரிக்கப்படுகின்றன. அந்தச் சாலை எந்தளவிற்குப் பழுதடைந்திருக்கின்றன என்ற முழு விவரத்தையும் அறிந்து உரிய வகையில் முழு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை அமைக்கும் திட்டம்.

217—(*வினா 19960)—திரு. இ. கணேசன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் இடைப்பாடி தொகுதியிலுள்ள கொங்கணாபுரத்தில் கடலை எண்ணெய் ஆலை ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

வடாற்காடு மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கான சிறப்புத் திட்டம்.

218—(*வினா 21518)—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் சிறப்புத் திட்டமாக முந்திரி பயிரிடும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : இல்லை.

1984 மார்ச் 8]

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொன்னார்கள். வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் முந்திரி பயிரிடுவதற்கான சிறப்புத் திட்டம் இல்லையா ? வேறு மாவட்டங்களில் இம் மாதிரியான திட்டங்கள் இருக்கின்றனவா ? வட ஆற்காடு மாவட்டத்தில் இந்தச் சிறப்புத் திட்டத்திற்குத் தேவையான அல்லது போதுமான மண் வளம் இல்லையா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் போதுமான மண் வளம், முந்திரி பயிரிடுவதற்கான சூழ்நிலை அதிகமாக இல்லை என்ற காரணத்தி னால் அந்த மாவட்டத்தில் இந்தச் சிறப்புத் திட்டம் இல்லை. வேறு அதிகமான மண்வளம் உள்ள சூழ்நிலை உள்ள மாவட்டங் களில் இத்தகைய சிறப்புத் திட்டத்தை நிச்சயமாக நடைமுறைப் படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

திரு. த. வேணுகோபால் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் முந்திரி பயிரிடுவதற்கு போதுமான மண் வளம் இல்லை என்று சொன்னார்கள். போதுமான மண் வளம் இல்லை என்று சொன்னாலும் பயிற்சி வழித் தொடர்பு மூலம் ஓரளவிற்காவது பயிரிட சிறப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி அந்தப் பகுதியில் எந்த அளவிற்கு முந்திரி பயிரிட முடியுமோ அந்த அளவிற்கு முந்திரி பயிரிட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : ஓரளவிற்காவது என்கிறபோது அது நடைபெற்று வருகிறது. அதற்கு சிறப்புத் திட்டம் தேவை இல்லை.

திரு. ப. சுந்தரம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம் ஏலகிரி மலையிலே முந்திரி கொஞ்சம் அளவிற்கு விளைகிறது. அங்கேயாவது முந்திரி சாகுபடியை அபிவிருத்தி செய்வதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : விளைகிற சூழ்நிலை எங்கேயிருக்கிறதோ அவற்றை உரிய வகையில் பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, முந்திரி பயிரிடுவதற்கு வட ஆற்காடு மாவட்டத்தில் 'சிறப்புத் திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அப்படி யென்றால், முந்திரியை பயிரிட்டு வளர்ப்பதற்கான திட்டங்கள் எந்தெந்த மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? அதில் எவ்வளவு எவ்வளவு ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படும்? அதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணம் எவ்வளவு ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : தனிக்கேள்வி போடவும்.